# மே தின விழா: முதல்வர் உரை...! முதல் பக்கத் தொடர்ச்சி

அதில் உள்ளே அமைந்திருக்கக்கூடிய நாங்கள் எல்லாம் சென்று மலர் வளையம் வைத்து, எங்கள் அஞ்சலியை, எங்கள் மரியாதையை, வணக்கத்தைச் செலுத்திவிட்டு வந்திருக்கிறோமே – அந்த நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தித் தந்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள் தான் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு எடுத்துச் சொல்லி, இன்றைக்கு தமிழ் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் மூலமாக இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் எத்தனையோ திட்டங்களை, எத்தனையோ சாதனைகளை தேர்தல் நேரத்தில் அறிவித்திருக்கக்கூடிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றித் தந்து கொண்டிருக்கக் கூடிய இந்த நேரத்தில், அதிலும் குறிப்பாக தொழிலாளர்களுக்காகச் செய்திருக்கக் கூடிய சாதனைகள் ஒன்றிரண்டை நான் உங்களிடத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால்;

• கடந்த நான்காண்டு காலத்தில் 28 இலட்சத்து 87 ஆயிரத்து 382 அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு 2 ஆயிரத்து 461 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறோம்.

• உணவு மற்றும் பிற பொருள்களை டெலிவரி செய்யும் GIG (கிக்) தொழிலாளர்களுக்கும், தமிழ்நாடு உப்பளத் தொழிலாளர்களுக்கும் தனி நல வாரியத்தை அமைத்திருக்கிறோம்.

• பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் உயிரிழந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கி, அதையும் நிறைவேற்றித் தந்து கொண்டிருக்கிறோம்.

• 20 அமைப்புசாராத் தொழிலாளர் வாரியங்களில், 2021-24 காலக்கட்டத்தில் 16 இலட்சம் ஊழியர்கள் புதிதாகப் பதிவு செய்திருக்கிறார்கள்.

• கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அமரும் உரிமையைக் கட்டாயமாக்கி அரசாணை வெளியிட்டிருக்கிறோம்.

**கார்ல் மார்க்சுக்கு சென்னையில் சிலை!**

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, உலக மாமேதை பொதுவுடைமைத் தத்துவத்தை அளித்த பிதாமகன், கார்ல் மார்க்ஸ் அவர்களுடைய சிலையை சென்னையில் அமைப்போம் என்று நாம் சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறோம். அதுவும் விரைவில் அமைக்கப் பட இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகி வருகிறது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இதன் மூலமாக, தொழிலாளர்களும் வளர்ந்து வருகிறார்கள். தொழில் வளர்ச்சிக்கு இலக்கு வைத்திருப்பது மாதிரியே தொழிலாளர் வளர்ச்சிக்கும் இலக்கு வைத்து இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எந்த முதலீட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தாலும், எந்த MoU ஒப்பந்தம் கையெழுத்திட்டாலும், அப்போது நான் முதன்முதலாக கேட்பது என்னவென்றால், எவ்வளவு பேருக்கு வேலை தருவீர்கள் என்றுதான் முதல் கேள்வியைக் கேட்பதுண்டு.

வேலை தருபவர் – பணியாளர் ஆகியோர் இடையிலான உறவை சமரசத்தின் மூலமாக நாம் சமப்படுத்தவேண்டும், பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலமாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். அப்படித்தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**என்றைக்கும் தொழிலாளர்கள் பக்கம் நிற்கும் அரசு இது!**

இது சாமானிய மக்களுக்காக, சாமானியர்களின் ஆட்சி என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம். என்றைக்கும் உங்கள் கூட – உங்களுக்காக நிற்கும், உங்களில் ஒருவன்தான் நானும், நம்முடைய அரசும்.

இந்த நாடே சமத்துவபுரமாக மாற வேண்டும் என்பதை எங்களின் இலட்சியம், கொள்கையாக வைத்து இலக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்! இதை மனதில் வைத்துதான் அரசு பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது.

இன்னும் ஒரு வார காலத்தில், திராவிட மாடல் ஆட்சி உருவாகி, நான்காவது ஆண்டை நிறைவு செய்து, 5-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கிறோம். எனவே, மே தினம் கொண்டாடக் கூடிய இங்கே இருக்கக்கூடிய தொழிலாளத் தோழர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, உங்களுக்காக உழைக்கின்ற, பாடுபடுகின்ற இந்த திராவிட மாடல் ஆட்சிக்கு நீங்கள் என்றைக்கும் உறுதுணையாக இருந்து இந்த ஆட்சிக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் – பக்கபலமாக இருக்க வேண்டும் என்று அந்த உறுதியை இந்த நல்ல நாளில் எடுத்துக் கொள்வோம் என்று கேட்டு, மீண்டும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய மே தின வாழ்த்துகளைத் தெரிவித்து நான் விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.



ரூ.600 கோடி மதிப்பில் வைகை ஆற்று தண்ணீர் திண்டுக்கல்லுக்கு வரும் திட்டத்தை திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் குடிநீர் திட்டத்தை தொடங்கி வைப்பார் என்று ஆலமரத்துப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற மே1 சிறப்பு கிராம சபை கூட்டத்தில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். தூய்மை பணியாளர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவித்ததோடு பழரசங்களை வழங்கி வாழ்த்தினார். அருகில் மாவட்ட ஆட்சியர் சரவணன், ஒன்றியச் செயலாளர்கள் முருகேசன், ராமன் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### திண்டுக்கல் மாவட்டம் – கொடைக்கானல் வட்டம் – மன்னவனூர் கிராமத்தில்

# காட்டுப்பன்றி தாக்கி காயமடைந்தவர்களுக்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மே 3-**

**திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், மன்னவனூர் கிராமத்தில் காட்டுப்பன்றி தாக்கி காயமடைந்தவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வரின் அறிக்கை வருமாறு:-

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், மன்னவனூர் கிராமம், உட்கடை கும்பூர், கும்பக்காடு பகுதியைச் சேர்ந்த ஜெயராஜ் (வயது 65) (த/பெ.கிருஷ்ணசாமி), திருமதி. சுசிலா (வயது 60) (க/பெ.ஜெயராஜ்) ஆகியோர் 26.4.2025 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுடன் சிறுவன் சிவன்பாண்டி (வயது 8) (த/பெ.சந்திரசேகர்) உடனிருந்துள்ளார்.

அந்நிலையில் விவசாய நிலத்தில் பணியின்போது எதிர்பாராதவிதமாக புதருக்குள் இருந்து வெளியே வந்த காட்டுப்பன்றி தாக்கியதில் மேற்படி மூன்று நபர்களும் பலத்த காயமடைந்து உடனடி யாக மன்னவனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு என்னுடைய ஆறுதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் திருமதி.சுசிலா மற்றும் சிறுவன் சிவன்பா ண்டி ஆகியோருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், லேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஜெயராஜ் என்பவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### கோவை வ.உ.சி மைதானத்தில்

# செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அரசுப் பொருட்காட்சி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்!

கோவை, மே 3-

கோவை வ.உ.சி மைதானத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரசு பொருட்காட்சியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

கோவை வ.உ.சி மைதானத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரசு பொருட்காட்சியினை 01.05.2025 மே தினத்தன்று தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

இதன் பின்னர் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், சாதனைகள், செயல்பாடுகளை, அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பொருட்காட்சிகளில், அரசின் திட்டங்களும், சாதனைகளும் சிறந்த முறையில் விளம்பரப்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம, நகர்ப்புர மக்கள், அரசுத் துறைகளின் திட்டங்களையும், சாதனைகளையும் அறிந்து கொண்டு, தேவையான தகவல்களைப் பெறுவதுடன், பொழுதுபோக்கு அம்சங்களையும் கண்டுகளித்து, புத்துணர்வு பெறுவதற்கு அரசுப் பொருட்காட்சிகள் வழிவகை செய்கின்றன.

1978 முதல் 2025 ஆம் ஆண்டு தற்போது வரை 226 பொருட்காட்சிகள் நடைபெற்று உள்ளது. கோயம்புத்தூர் அரசுப் பொருட்காட்சி 227 வது பொருட்காட்சியாகும். இதுவரை கோயம்புத்தூரில் 37 பொருட்காட்சிகள் நடைபெற்றுள்ளது. தற்போது நடைபெறவிருப்பது 38 ஆவது பொருட்காட்சியாகும். 202425 ஆம் ஆண்டில் நடைபெற்ற மதுரை, கோயம்புத்தூர், சேலம், கடலூர், திருநெல்வேலி, வேலூர், தஞ்சாவூர் என 7 முக்கிய நகரங்களில் நடத்தப்பட்ட அரசு பொருட்காட்சிகளை 5,57,755 பார்வையாளர்கள் கண்டு களித்துள்ளனர்.

இதன் வாயிலாக 81 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் வருவாய் அரசிற்கு ஈட்டப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றிற்கு 10 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அரசுப் பொருட்காட்சி, கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 மாவட்டங்களில் ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப்படுகிறது. மேலும், அனைத்து மாவட்ட மக்களும் பயன்பெறும் வகையில் 4 மாவட்டங்களில் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. செய்தி மக்கள் தொடர்புத் துறை, சுற்றுலாத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வனத்துறை, வேளாண்மைத் துறை, காவல் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, கூட்டுறவுத் துறை, வருவாய்த் துறை, சமூக நலத்துறை, தோட்டக் கலைத் துறை, பொதுப் பணித் துறை, இந்து சமய அறநிலையத் துறை, பள்ளிக் கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கைத்தறி மற்றும் கதர் கிராமத் தொழில் துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, பிற்படுத்த ப்பட்டார், மிகப் பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, மீன்வளத்துறை என மொத்தம் 26 அரசுத் துறைகளும், கோயம்புத்தூர் மாநகராட்சி, ஆவின், மாசு கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், மகளிர் மேம்பாட்டுக் கழகம் என மொத்தம் 7 அரசு சார்பு நிறுவனங்கள் என மொத்தம் 33 துறைகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. பொருட்காட்சியில் பங்கேற்கும் 26 அரசுத் துறை களுக்கும், அரங்கம் அமைப்பதற்கு 77 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பொருட்காட்சி இன்றிலிருந்து தொடங்கி 45 நாட்கள் நடைபெறவுள்ளது. மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை திறந்திருக்கும். பொதுமக்கள் கடந்த ஆண்டை போல இந்த ஆண்டும் நல்ல வரவேற்பினை அளிக்கவேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், விடியல் பயண திட்டம், கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை, கலைஞரின் கனவு இல்லம் திட்டம் உள்ளிட்ட பல்வேறு அரசின் திட்டங்கள் குறித்து விளக்கும் வகையில் அரங்குகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

இப்பொருட்காட்சியில் பொழுதுபோக்கு அம்சம் உட்பட தனி உரிமையினங்கள், தனியார் அரங்கு மற்றும் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அரசுப் பொருட்காட்சி நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.15/ம், சிறுவர்களுக்கு ரூ.10/ம், மாணவ, மாணவியருக்கு ரூ.5/மாக வசூலிக்கப்படுகிறது. இதில் கடந்த 2024 கோயம்புத்தூர் அரசுப் பொருட்காட்சியினை 1,68,433 பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர். இப்பொருட்காட்சியின் நுழைவுச் சீட்டு மற்றும் ஏலம் மூலம் அரசிற்கு ரூ.44.30 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. அரசுப் பொருட்காட்சி கோயம்புத்தூரில் இன்று தொடங்கி வைக்கப்பட்டு, இப்பொருட்காட்சி தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறும். எனவே, பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்று அரசு நல திட்டங்களையும், அரசின் செயல்பாடுகளையும் அறிந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

### பதிவுத்துறைக்கு

# ஒரே நாளில் 272.32 கோடி ரூபாய் வருவாய்!

## அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!

சென்னை, மே 3 -

பதிவுத்துறைக்கு ஒரே நாளில் ரூபாய் 272 கோடியே 32 லட்சம் வருவாய் கிட்டியுள்ளதாக அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

30.4.2025 புதன்கிழமை அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டன.

பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று 30.4.2025 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு



100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்குபதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டது.

2024-25 ம் நிதியாண்டில் கடந்த 10.2.2025 அன்று ஒரே நாளில் 23,421 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு இதுவரையில் இல்லாத அளவில் அரசுக்கு ரூ.237.98 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 2025-26 ம் நிதியாண்டில் இதற்கும் அதிகமாக 3042025 அன்று ஒரே நாளில் 27,440 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு இதுவரையில் இல்லாத அளவில் அரசுக்கு ரூ.272.87 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஒரு நாள் வருவாய் வசூலில் இதுவரை இல்லாத அளவில் அதிக வசூல் செய்து புதிய மைல்கல்லை பதிவுத்துறை எட்டியுள்ளது என வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! மு.சரவணன்.எம்.சி. தலைமை!

# திரு.வி.க நகர் வடக்குப் பகுதி சார்பில் இன்னிசை பட்டிமன்றம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்!

சென்னை,மே.3-

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க நகர் வடக்கு பகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மனிதநேயம்-71, சொல்லால் சுடர் ஏற்போம்! சூரியனை தினம் போற்றுவோம்!! எனும் தலைப்பில் 30.4.2025, புதன்கிழமை மாலை: 6.00 மணி அளவில், சென்னை, புளியந்தோப்பு, டிகாஸ்டர் சாலையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், 72வது மாமன்ற உறுப்பினர் மு.சரவணன்.எம்.சி. தலைமையில் நடைபெற்ற மாபெரும் இன்னிசை பட்டிமன்றத்தை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார். இந்த இன்னிசை பட்டிமன்றத்தில் நடுவராக செம்மொழி கவியரசி கல்பாக்கம் ரேவதி அவர்களும், இப்பட்டிமன்றத்தில் பேச்சாளர்களாக விஜய் டிவி கலக்கப்போவது யாரு புகழ் செம்மொழி அன்னலட்சுமி, சன். டிவி புகழ் பேராவூரணி நீலவேணி, கலைஞர் தொலைக்காட்சி புகழ் மணப்பாறை லலிதா, விஜய் டிவி புகழ் கல்பாக்கம் காயத்ரி ஆகியோர் உரையாற்றினர்.

இவ்விழாவில் சென்னை பெருநகர மேயர்.பிரியாராஜன் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, பகுதி கழகச் செயலாளர்கள்: செ. தமிழ்வேந்தன், எம் சாமி கண்ணு, இசட். ஆசாத் எம்.சி, சரிதா மகேஷ் குமார் எம் சி, வானவில் விஜய், லயன் பி.உதயசங்கர், எம் பெரோஸ் கான், கா.ராஜ்முகமது, இரா.வீரமணி, தமிழ்ச்செல்வி எம்.சி. எல்.ரமணி. எம் சி, பெரம்பூர் ஆர் ராஜன். வட்ட கழகச் செயலாளர் எஸ். புஷ்பராஜ்,

ஜெ.கிருஷ்ணகுமார், பரிமளா சுரேஷ்பாபு மா.ருத்ரமூர்த்தி, சுரேஷ் குமார் என்ற பொல்லு சுரேஷ், எம் தமீம் பாய், எஸ் வெங்கடேசன், எஸ் சசிகுமார்,வி.கே வெங்கடேசன் மற்றும் கழகத் தோழர்கள் செயல்வீரர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

வட்டக் கழகச் செயலாளர்கள்: எம்.இசட். அபோய், எம்.ஏ. டீக்கா, பரிமளா சுரேஷ்பாபு, மா ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்கள்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் – 70, இறையாண்மை காக்கும் தமிழுண்மை! இவரால் அடைந்தது நம் மேன்மை!! எனும் தலைப்பில் எழும்பூர் வடக்கு பகுதியில், மாபெரும் புகழரங்கம் 29.04.2025 செவ்வாய்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, சூளை, அங்காளம்மன் கோயில் தெரு அருகில் நடைபெற்றது.



வனத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சாயல்குடி மற்றும் முதுகுளத்தூர் மத்திய ஒன்றியம் மற்றும் இளைஞர் அணி சார்பில் கோடை காலத்தில் பொதுமக்களுக்கு பெரிதும் பயன்படும் வகையில், நீர் சத்துக்கள் நிறைந்த பழ வகைகளுடன், நீர்மோர் பந்தலை துவக்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் இருந்தனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், காரையூர் ஊராட்சியில் நடைபெற்ற தொழிலாளர் தின கிராம சபை கூட்டத்தில் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்ட நிகழ்வில், கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி கா.வானதி, செயற்பொறியாளர் திருமதி அனுராதா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கேசவதாசன் உட்பட பலர் உள்ளனர்.